செம்மண்

நிலம் 3 துகள் 145 வள்ளுவர் ஆண்டு 2052, 29 சித்திரை - 05 வைகாசி 2023 வாரமலர் பக்கங்கள் 15



# 21 ஆம் நூற்றாண்டிலும் சாதி . . .?

தற்போது தமிழர் மத்தியில் மத அரசியலும், சாதி அரசியலும் மிகவும் கூர்மையடைந்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் என்று கருதப்படும் சமூகத்தினர்தான் இந்தச் சாதி அரசியலை ஆரம்பித்தார்கள் என்ற பிழையான கற்பிதங்கள் தற்போது அதிகம் வெளிவந்தவண்ணமுள்ளன. இது உண்மை என்றால் சி.வி விக்னேஸ்வரன் ஒடுக்கப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட சாதிப் பிரிவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். விக்னேஸ்வரனின் சாதிப் பாகுபாடு பற்றி வடக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சராகவிருந்த பொ.ஐங்கரநேசன் அண்மையில் ஊடகங்களில் வெளிப்படையாகக் கூறினார். அருந்தவபாலன் இந்தச் சாதியைச் சேர்ந்தவர் என அறிந்தேன் உங்களின் சாதி என்னவென்று கூற முடியுமா? என்று ஐங்கரநேசனிடம் சி.வி. விக்னேஸ்வரனின் நீதிபதி விசாரணை இருந்திருக்கிறது.

**சுந்தரலிங்கமும் டக்ளஸும்**

தாழ்ந்த சாதியினர் என்று வரையறுக்கப் பட்டிருப்பவர்களை மாவிட்டபுரம் கந்தசுவாமிக் கோவிலுக்குள் அனுமதிக்க கூடாது என்று அடங்காத் தமிழன் என்று பலராலும் வர்ணிக்கப்படும் பேராசிரியர். சி.சுந்தர லிங்கம் முழக்கமிட்டார். தற்போதும் யாழ்ப்பாணத்தில் சாதிப் பிரச்சினை இருக்கிறது என்று ஐக்கிய நாடுகளின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.

***யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த 7 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள். அவர்கள் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் உயர்சாதியினர் என்கிற நிலையில் இருத்திப் பார்க்கப்படும் மேட்டுக்குடி வர்க்கத்தினராகவே இருந்தனர். 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டின் சாதி அரசியல் வெளித்தெரிந்த முக்கிய ஆதாரமாக இதைக் குறிப்பிட முடியும்***



மணிமாறன் துர்க்காதேவி

தற்போதும் யாழ்ப்பாணத்தில் சாதிப் பிரச்சினை இருப்பதை நேரில் வந்து அவதானித்த வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் அது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினவியபோது, அதற்கு டக்ளஸ் தேவானந்தா மழுப்பலான பதில்களை அளித்து நழுவினார். அத்தோடு அந்த ஊடகவியலாளர் புதிய பிரச்சினையைக் கிளப்பப் பார்க்கிறார் என்று சொல்லி விசயத்தைத் திசை திருப்பிக் கதையையும் மாற்றினார். யாழ்ப்பாணத்துக்கு வந்த அந்த ஊடகவியலாளர் இங்கு அவதானித்த சாதிப்பாகுபாடு பற்றி வினவிய போது யாழ்ப்பாணத்தில் தற்போது அப்படி எதுவும் இல்லை என்றும் அப்படி எந்தவித குற்றச்சாட்டுகளும் தனக்குக் கிடைப்பதில்லை என்றும் பதிலளித்தார் டக்ளஸ். அவருக்குக் குற்றச்சாட்டுகள் கிடைக்கவில்லை எனவே - அவ்வாறு ஒரு பிரச்சினை இல்லை என்பதாக இருந்தது அவரது பேச்சு. அதை மறுத்துப் பேசிய ஊடகவியலாளர் ஐ.நாவின் தரவுகளையும், நேரில் சென்று தான் சந்தித்த சம்பவங்களையும் குறிப்பிட்டுக் கூறி இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இருக்கிறதே என்றபோது அவர் சொல்வது உண்மையா? பொய்யா? என்பதை ஆராய முற்படாத டக்ளஸ், அவர் ஒரு புதிய பிரச்சினையைக் கிளப்பப் பார்க்கிறார் என்று எதிர் வரும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்போகிறேன் என்று முடித்து வைத்தார்.

**அருண் சித்தார்த் பற்றி மறவன்புலவு சச்சிதானந்தன்**

அண்மையில் தொலைக்காட்சி ஒன்றுக்குச் செவ்வியளித்த மறவன்புலவு சச்சிதானந்தனிடம் ஊடகவியலாளர் ஒருவர், நல்லூர்க் கோவிலை இடிக்க வேண்டும் என்று கூறிய அருண் சித்தார்த்துடன் உங்களுக்கு என்ன உறவு? என்று வினவினார். அதற்கு மறவன்புலவு சச்சிதானந்தன், நல்லூர்க் கோவிலை உடைக்க வேண்டும் என அருண்சித்தார்த் கூறியதை வெறும் கோவில் உடைப்பாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன என்பதை நாம் கண்டறிய வேண்டும். அவரது குடும்பம் மிக நீண்ட காலமாகச் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதுபற்றி அவர் எனக்குத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். நாங்கள் இன்னோர் கேள்வியையும் கேட்கலாம். பாபர் மசூதி ஏன் உடைக்கப்பட்டது. அதற்கான சமூகப் பின்னணி ஒன்று இருந்திருக்கிறது. என்பதையும் நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் - என்று பதிலளித்தார்.

**சந்திப்புகளின் போது சாதியை அறிவது**

பேருந்துப் பயணம், மருத்துவமனை, பொது இடங்கள் என யாரையாவது சந்திக்கும்போது "நீர் எவடம்?", "எந்தாக் கோவிலடி?", "அங்கு யாருக்குச் சொந்தாம்?" எனத் துருவித் துருவி ஆராய்ந்து மற்றர்களின் சாதியை அறிந்த பின் தன்னை ஒருபடி உயர்வாகக் கருதுபவர்களாகச் சாதி அடுக்குகள் இருக்கின்றன. ஏனையவர்களைச் சாதி ரீதியாகக் கூனிக்குறுக வைப்பதே இதன் பின்னாலுள்ள தந்திரமாக இருக்கிறது. ஆனால் இவ்வாறு புலனாய்வு செய்து அறிய வேண்டிய சாதியை அருண் சித்தார்த் போன்ற இளைஞர்கள் கதையைத் தொடங்கும்போதே கூறிவிடுவதால் அவர்களைக் கூனிக்குறுக வைக்கும் நிலையை ஏற்படுத்த முடியாத சூழல் மேட்டுக்குடி வர்க்கம் என்று செல்லப்படும் தரப்புகளுக்கு ஏற்பட்டுள்ளது. நான் இந்தச் சாதியைச் சேர்ந்தவன் தான் உங்களுக்கு என்ன வேண்டும் என்று முகத்தில் அறைந்த மாதிரிக் கேட்டுவிடும் நிலையே இப்போது பரவலாக உள்ளது.

**மற்றப்பாட்டி அணுகுமுறை**

ஐங்கரநேசனின் சாதியை சி.வி. விக்னேஸ்வரன் அறிய முற்பட்;டது என்பது ஒருவிதமான 'மற்றப்பாட்டி' அணுகுமுறையாகும். அரச திணைக்களங்கள், பாடசாலைகள் போன்ற எல்லா இடங்களிலும் "மற்றப்பாட்டி" என்கிற சங்கேத மொழியால் சாதி மாறியிருப்பது குறித்து ஒருவரை ஒருவர் கூறுவதுண்டு. ஒருவரைப் பார்த்து மற்றவர் மற்றப்பாட்டி என்று கூறுவதும் அந்த மற்றவரைப் பார்த்து ஒருவர் மற்றப்பாட்டி என்பதும் அந்த இருசாராருக்கும் ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் நடக்கின்ற சம்பவங்களாகும். அரச திணைக்களங்களில் சாதிப் பிரிவினருக்கு மேலதிகமாக அரசியல் கட்சிப் பிரிவுகளும் தலைதூக்கியிருப்பதால் ஊழியர்கள் மத்தியில் இணைந்து பணிபுரியும் சூழல் குறைந்து வருகிறது.

**அரசியல் ஆபத்து**

2020இல் நடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெவ் வேறு கட்சிகளைச் சேர்ந்த 7 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள். அவர்கள் வெவ் வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் உயர்சாதியினர் என்கிற நிலையில் இருத்திப் பார்க்கப்படும் மேட்டுக்குடி வர்க்கத்தினராகவே இருந்தனர். 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டின் சாதி அரசியல் வெளித்தெரிந்த முக்கிய ஆதாரமாக இதைக் குறிப்பிட முடியும்.

யாழ் குடாநாட்டு மக்கள் தொகையில் மேட்டுக்குடி வர்க்கத்தினர் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு வீதமாக இருக்கிற போதிலும் மற்றவர்களின் வாக்குகளை ஏதோ ஒரு வகையில் பெற்றுவிடுகிறார்கள். சாதியில் தாழ்த்தப்பட்ட மக்களில் இருந்து ஒரு பிரதிநிதி கூட நாடாளுமன்றத்துக்குச் செல்ல முடியாத அளவுக்கு ஜனநாயகச் சமமின்மை காணப்படுகிறது. இங்கு சாதிப்பாகு பாடு என்று ஒன்றுமில்லை ஒரு சிலர் தேவையில்லாமல் சாதியைத் தூக்கிப் பிடித்து அரசியல் நடத்துகினம் என்று தமிழத் தேசிய அரசியல்வாதிகளும் டக்ளஸ் உட்பட்டவர்களும் இயந்திரம் மூலம் தேர் இழுத்த இந்த நூற்றாண்டு காலத்திலும் கதை விடுகின்றனர். இறுதியாகச் சி.வி. விக்னேஸ்வரன் ஐங்கரநேசனிடம் கிண்டியது கூட சாதியை அல்ல என்பதாகவே இவர்களது எதிர்வாதம் இருக்கும். ஏன் எனில் இந்தச் சாதி அரசியல்வாதிகளின் உலகம் வேறு மக்களில் யதார்த்தம் வேறாகவே எப்போதும் இருக்கிறது. இதனாலேயே இந்தத் தலைவர்களால் மக்களின் ஒருமித்த செல்வாக்கைப் பெற முடியாமல் ஏராளமாகப் பிரிந்து கட்சிகள் நடத்தித் தமக்கெனச் சிறு சிறு மக்கள் கூட்டத்தோடு அரசியலில் முடங்கிக் கிடக்கிறார்கள். சாதிகள் இல்லையடி பாப்பா - என்று பாரதியார் சொன்ன அறிவுரை இன்றும் யாழ்ப்பாணத்தவர்களுக்குப் பொருந்திப்போகும் அளவுக்கு இருக்கிறது யாழ்ப்பாணத்தவர்களின் 22ஆம் நூற்றாண்டை நோக்கிய மூளை விருத்தியின் மந்தம்.

# "இந்தியா வந்து காப்பாற்றும் என்றார்கள்"

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

சரத் உபேந்திர (மைக்) என்பவர் களுத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1989இல் கொமண்டோப் படைப்பிரிவில் பயிற்சியை நிறைவு செய்தார். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் பங்கெடுத்தவர். 2ஆயிரமாம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி ஆனையிறவுப் படை முகாம் புலிகளின் தாக்குதலுக்குள்ளானபோது அந்த முகாமிலிருந்த படையினரை மீட்கும் பணியில் ஈடுபட்டவர். தனது போர் அனுபவங்கள் குறித்து நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்தில் "நளின் சமஹ ஹெலிங்" (நளினுடன் நேரடி) என்ற நிகழ்ச்சியில் அவர் கீழ்வருமாறு பகிர்ந்தார்.

நான் கொமாண்டோப் படையணியில் சேர்ந்த பின் வெலிஓயா, மன்னார் மற்றும் பல பகுதிகளில் கடமையாற்றியிருக்கிறேன். ஆனால், ஆனையிறவு முகாம் மீட்புப் பணியில் ஈடுபட்டதை இலகுவில் மறந்துவிட முடியாது. நான் ஆனையிறவு முகாம் பகுதிக்குச் செல்லத் தயாரானபோது எமது அணிக்கு ஜெயமான சேர் (தற்போது பிரிகேடியர்) தலைமை தாங்கினார். அப்போது மழை காலம். ஆனையிறவு முகாமைச் சுற்றிப் புலிகள் தமது அணிகளை நகர்த்தியிருந்தார்கள். முகாமுக்குள் இருந்த சிப்பாய்களில் பலர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களைக் காப்பாற்ற முயற்சித்தோம். அது இலகுவான பணியாக இருக்கவில்லை.






படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த ஆனையிறவு முகாமைப் புலிகள் முடக்கிய பின்னர் அந்த முகாமுக்குள் நாம் இயக்கச்சி மற்றும் கிளாலிப் பகுதிகளூடாக மாத்திரமே செல்லக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனையிறவில் காயப்பட்ட சிப்பாய்களை மீட்பதற்குப் பலாலி முகாமிலிருந்து 5ட்ரக்குகள், 2பிக்அப் ரக வாகனங்கள், வேறு சில வாகனங்கள் எனத் தொடர் அணியாகக் கிளாலிப் பகுதிக்குச் சென்றோம். எமது வாகனத் தொடரணியில் முன்னால் சென்ற வாகனத்துக்குப் புலிகள் கிளைமோர் அடித்தார்கள்.

**வெற்றிலைக் கேணியிலிருந்து ஆட்லறித் தாக்குதல்**

கிளைமோர்த் தாக்குதலின் பின்னர் வெற்றிலைக்கேணிப் பகுதியிலிருந்து ஆட்லறித் தாக்குதல்களைப் புலிகள் மிக மோசமாக மேற்கொண்டார்கள். அவை 20 மீற்றர் தூர இடைவெளிகளில் விழுந்து வெடித்தன. அவ்வாறு இருந்தும் ஆனையிறவிலிருந்து மீண்டு அந்த இடத்துக்கு வந்திருந்த காயப்பட்டவர்களை எமது வாகனத்தில் வேகமாக ஏற்றினோம். ஜெயமான சேரை ட்ரக்கில் இருந்து இறங்கவேண்டாம் என்று கூறினேன். நான் காயப்பட்ட வேறொருவரை ஏற்றியபோது ஜெயமான சேர் மற்றப் பக்கத்தால் வாகனத்திலிருந்து கீழே இறங்கிவிட்டார். காயப்பட்டவர்களை ஏற்றிய ட்ரக்கைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக வேகமாகத் திருப்பி எடுத்தார் சாரதி. சேர் இறங்கிய நிலையில் அவரை அங்கு விட்டு விட்டுப் போவதற்கு நான் விரும்பவில்லை. ட்ரக்கிலிருந்து பலவந்தமாக இறங்கிச் சேர் இறங்கிய பக்கமாக நடந்து சென்றேன். அப்போது ஓரளவுக்கு இருட்டிவிட்டது. அந்த இடங்களில் புலிகள் இருப்பார்கள் என்ற

பயத்தில் கிளாலிப் பகுதியில் வீடுகள் இருந்த பக்கமாக இறங்கிப் பதுங்கி ஒளித்து நடந்தேன். யாரோ தமிழில் கதைக்கும் சத்தம் கேட்டது. புலிகள் அருகில் நிற்கிறார்கள் என்று ஊகித்துக்கொண்டேன். அருகிலிருந்த பெரிய வீடு ஒன்றுக்குள் புகுந்து பெரிய அறைக்குள் மறைந்து கொண்டேன். அது கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களின் வீடு என்று தெரிந்தது. அந்த அறைக்குள் நீல வர்ணத்தில் ஒரு திரை போடப்பட்டிருந்தது. அதில் வெள்ளை நிறத்தில் மெழுகுதிரிப் படம் வரையப்பட்டிருந்தது.

சேரைக் கூப்பிட்டேன். அவர் என்னைக் கட்டிப் பிடித்தார். அவருக்கு அருகில் இன்னோர் சிப்பாய் நின்றார். காயப்பட்டவர்களை மீட்க வழியில்லை என்பதால் அதன் பின்னர் கிளாலிக் கடற்படைக் காவலரண் பக்கமாக நடந்து சென்று அன்றிரவு அங்கு தங்கினோம். மறுநாள் காலையில் காயப்பட்டவர்களை மீட்பதற்காக மீண்டும் புறப்பட்டபோது ஆனையிறவு முகாமைக் கைவிட்டுப் படையினர் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர் என்று செய்தி கிடைத்தது.

ஆனையிறவு முகாமுக்கு இயக்

சேவைக்குப் பயன்படுத்தினார்கள். பிரிகேடியர் பேர்சி பெனாண்டோ தலையில் துப்பாக்கிச்சூடு பட்டு இறந்தார். அவர் எப்போதும் புலிகளைக் கொல்ல வேண்டும் என ஆவேசமாகப் பேசுபவர்.

### இந்தியா உதவும் எனக் கூறினார்கள்

ஆனையிறவு முகாம் புலிகளின் இறுக்கமான முற்றுகைக்குள் வந்தபோது ஆனையிறவுக்குள் சிக்கியிருக்கின்ற படையினரை அங்கிருந்து இந்தியா மீட்டுத்தரும் என்றும் ஆயுதங்களையோ ஏனைய பொருள்களையும் அங்கிருந்து எடுத்துச் செல்ல முடியாது என்றும் அறிவித்திருக்கிறது என்று உயர் அதிகாரிகள் மூலம் அறிந்தேன். பின்னர் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

**ஆனையிறவு முகாமை விட்டுப் படையினர் வெளியேறும் நிலை ஏற்பட்டால் முதலில் அங்கிருந்த தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் தகர்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கிருந்தது**

### புலிகளின் அரணை உடைத்தோம்

புலிகள் 25அடி உயரமான மண் அரணை அமைத்து அதன் கீழ் நிலக்கன்னி வெடிகளைப் புதைத்து வைத்திருந்தார்கள். அதை உடைத்தால் படையினரை வெளியே எடுக்க முடியம் என்று சவேந்திர சில்வா குறிப்பிட்டார். அதே இடத்தில் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனிப் படைப்பிரி வின் நிலத்தடி முகாம் ஒன்று மிகப் பலமாகப் போடப்பட்டிருந்தது. அவ்வாறு ஒரு முகாம் இருப்பது வெளியே இருந்து பார்த்தால் தெரியாதபடி அமைத்திருந்தார்கள். அதை உடைப் பதற்காக முதலில் வேவு பார்த்தோம். பின்னர் அருகிலிருந்த படையினரை வைத்து சிறப்புப் பயிற்சி வழங்கிப் புலிகளின் அந்தப் பாதுகாப்பரணைக் குண்டு வைத்துத் தகர்த்தோம். புலிகள் அதை எதிர்பார்க்கவில்லை. அந்தத் துணிகரத் தாக்குதலைச் செய்ததால் மைக் என்ற எனது பெயர் பிரபல்யமானது.

சிறிது நேரத்தில் புலிகள் அங்கு வந்து அந்த அறைக் கதவை உதைத்துத் திறந்தார்கள். எனக்குத் தப்ப வேறு வழியிருக்கவில்லை. அவர்கள் தாக்கினால் திருப்பித் தாக்கிவிட்டு நானும் சுட்டு உயிர் துறப்பது என்று முடிவெடுத்தேன். அவர்கள் கதவைத் திறந்ததும் வாசலில் நின்றபடி தமிழில் ஏதோ சொல்லிவிட்டுப் போனார்கள். நான் மறைந்திருந்ததை அவர்கள் காணவில்லை. அங்கு நாற்பது நிமிடங்கள் வரை மறைந்திருந்தேன்.

பின்னர் அந்த அறையிலிருந்த இயேசு சிலை ஒன்றை எடுத்து என்னுடன் வைத்துக்கொண்டேன். அது மட்டுமே எனக்குத் துணை என்று நினைத்து அதை இடுப்பில் செருகிக் கொண்டேன் (அதை இப்போதும் வைத்திருக்கிறார்). பின்னர் சேர் இறங்கிய இடத்துக்கு மெதுவாகச் சென்றேன். இருட்டிய நிலையிலும் சேரின் உருவம் தெளிவாகத் தெரிந்தது. அருகில் இன்னொருவர் நிற்பதைக் கண்டேன். சேரைப் புலிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று நினைத்தேன். மிக அருகில் சென்றபோது சேர் சிங்களத்தில் கதைப்பது கேட்டது. நானும் சிங்களத்தில்

கச்சிச் சந்தியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்தே படையினர் குடிநீர் எடுப்பது வழக்கம். முதலில் புலிகள் அந்தக் கிணற்றை முற்றுகையிட்டதால் முகாமுக்குள் குடிநீர் இருக்கவில்லை. அதனால் சமையல் செய்ய முடியவில்லை. இறுதிநாள்களில் கங்குன் கீரையை மாத்திரம் வைத்துச் சாப்பிட்டு உயிர்வாழ வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

### தொலைத் தொடர்புக் கோபுரம் புலிகளின் வசம்


ஆனையிறவு முகாமை விட்டுப் படையினர் வெளியேறும் நிலை ஏற்பட்டால் முதலில் அங்கிருந்த தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் தகர்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கிருந்தது. ஆனால் வேகமாக முகாமை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதால் அந்தக் கோபுரத்தை தகர்ப்பதற்கு அவகாசம் இருக்கவில்லை. அங்கிருந்த பெரிய மின்பிறப்பாக்கியைக் கூட இயங்கிய நிலையிலேயே கைவிட்டு வந்தார்கள் என்று பின்னர் அறிந்தேன். அந்தத் தொலைத்தொடர்புக் கோபுரத்தைப் பின்னர் புலிகள் தமது வானொலிச்

### யாழ்ப்பாணத்தில் நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் நில வரைபடத்தைப் பார்த்துப் பல கிராமங்களை ஒரே இரவில் சுற்றி வளைத்து வைத்து மறுநாள் சூரியன் உதிக்க முன்னதாகவே ஒரு பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்துக்குப் படையினர் நகர்ந்து செல்வர். அப்போது வீடுகளையும் ஏனைய பகுதிகளையும் சோதனையிட்டு அங்கிருப்போரை மைதானங்கள், சந்திகள், கோவில்கள் என ஓரிடத்துக்கு அழைத்துச் சென்று வரிசையாக நிறுத்தி வைத்து விசாரிப்போம்.

எமது அணியில் இருந்த எதிரிசிங்க என்பவர் நன்றாகத் தமிழ் பேசுவார். நான் நின்ற இடத்தில் வரிசையாக வந்தவர்களை அவர் விசாரித்துக் கொண்டிருந்தார். பெயர், என்ன வேலை செய்வது போன்ற விவரங் களுடன் அடையாள அட்டையையும் பரிசோதித்தார். அப்போது அந்த வரிசையில் நின்ற ஒருவர் வித்தியாச மாக நாலா புறமும் அவதானிப்பதை நான் அவதானித்தேன். நான் நின்ற இடத்தில் இன்னொருவரை நிறுத்தி விட்டு வரிசையின் முடிவுப் பகுதிக்கு நடந்துசென்றேன். பின்னர் அங்கி ருந்து குறிப்பிட்ட நபர் நின்ற இடத் துக்கு வந்து அவருக்குப் பின்னால் மூன்றவதாக நின்றவரின் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்துவிட்டுப் பெயர்? வேலை விவரங்களைப் பார்ப் பதுபோல பாசாங்கு செய்துகொண்டு குறித்த நபரை அவதானித்தேன். அவருக்கு முன்னால் நின்றவரை விசாரிக்க முற்பட்டபோது குறிப்பிட்ட நபர் பின்னால் திரும்பித் தனது ரீசே ர்ட்டை உயர்த்தித் தனது இடுப்பிலி ருந்த கைத்துப்பாக்கியை எடுத்து எனக்கு இலக்கு வைத்தபோது சடுதி யாக அவரது இரு கைகளையும் பிஸ் டலையும் மடக்கிப் பிடித்தேன். அவ ரது விரல் சுடுவதற்குத் தயார் நிலை யில் இருந்ததால் துப்பாக்கிக்குள் புகுத்திய விரலை மடக்கி முறித்தேன். அவர் கீழே விழுந்ததும் அவரது கைத்துப்பாக்கியாலேயே அவரைச் சுட்டேன். யாருமே எதிர்பாராத சம்பவம் அது.

---



**ரவீந்திரன்**

# அம்பாறையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் 8 மாவட் டங்கள் காணப்படுகின்றன. இதில் வடக்கில் 5மாவட்டங்களும் கிழக்கில் 3 மாவட்டங்களும் உள் ளன. கடந்த வாரம் 7 தமிழ்த் தேசியக் கட்சிகள் இணை ந்து வடக்குக் கிழக்கில் கடையடைப்பு மற்றும் நிர்வாக முடக்கப் போரட்டம் ஒன்றை நடத்தின. புதிய பயங் கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்ப்பது, ஆலயங்கள் மீதான தாக்குதல்களைக் கண்டிப்பது என அந்த முடக் கத்துக்குக் காரணங்களும் கூறாப்பட்டன. ஆனால், இந்தப் போராட்டம் 3 விடயங்களை வெளிக்காட்டியி ருக்கிறது. அம்பாறை மாவட்டம் தமிழ்த் தேசியத்தின் பிடியில் இல்லை என்பது அதில் முதலாவது. இலங்கை அரசு இந்த முடக்கப் போராட்டத்தைக் கண்டு கொள்ள வில்லை என்பது இரண்டாவது. தமிழ்த் தேசியக் கட்சி கள் எதிர்பார்த்த வெளியுலகம் கண்டுகொள்ளவில்லை என்பது மூன்றாவது.

**தமிழரின் நிலத்தில் தமிழர் இல்லை**

அம்பாறை மாவட்டத்தைத் தமிழரின் பாரம்பரிய நிலம் என்று கூறினாலும் அங்கு தமிழர் இல்லை என்பதே உண்மை. இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுதலை பெற்ற பின்னர் அங்கு ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், அதையொட்டிய திட்டமிட்ட ஏனைய செயற்பாடுகளால் அதுவரை ஒன்றாக இருந்த மட்டக்களப்பும் அம்பாறையும் 1961இல் நிர்வாக ரீதி யாகத் துண்டாடப்பட்டன.

அதன் பின்னர் கல்முனை, சம்மாந்துறை, பொத்து வில், அம்பாறை என நான்கு நாடாளுமன்ற உறுப்பி னர்களுக்கான மாவட்டமாக இருந்தது. 1978இன் பின்னர் பல அங்கத்தவர் தொகுதியாக திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. தற்போது இரண்டு நகர சபைகளும் 14 பிரதேச சபைகளும் 19 பிரதேசசெயலர் பிரிவுகளும் அங்கு உண்டு. அம்பாறையின் இனப்பரம்பலில் முஸ்லிம்கள் 44வீதமும் சிங்களவர் 37.5 வீதமும் தமிழர்கள் 18.3 வீதமும் ஏனையோர் 2 வீதமும் உள்ளனர்.

**அம்பாறையில் கூட்டமைப்பு**

அம்பாறை மாவட்டத்தில் 2001 டிசம்பர் 5இல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் சார்பில் போட்டியிட்ட அரியநாயகம் சந்தி ரநேரு வெற்றிபெற்றார். 2004 ஏப்ரல் 2இல் நடந்த தேர் தலில் க.பத்மநாதன், தோமஸ் தங்கத்துரை வில்லியம் ஆகியோர் வெற்றி பெற்றனர். 2010 ஏப்ரல் 8ஆம்

# தலைவர்கள் போராட வேண்டிய காலம்

**நாகராசா**

1972 மே 22இல் இலங்கை குடியர சாகியது. அதன் பின்னர் சிலோன் என் றிருந்த பெயர் மாற்றப்பட்டு சிறீலங்கா என்று சூட்டப்பட்டது. பிரித்தானியரின் பிடியிலிருந்து இலங்கை முழுவதுமாக விடுவிக்கப்பட்டது. இந்தக் குடியரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முதல் நாள் இரவு வடக் குக் கிழக்கு முழுதும் கறுப்புக் கொடி களைப் பறக்கவிட்டும் தந்திக் கம்பி களை அறுத்தும் அரச விளம்பரப் பல கைகளில் காணப்பட்ட சிங்கள எழுத் துக்களுக்குக் கழிவு ஒயில், சாணம்



பூசியும் எதிர்ப்புக் காட்டியது. இவ்வா றெல்லாம் செய்தும்கூட அப்போதைய தலைமை அமைச்சர் சிறிமாவோ பண் டாரநாயக்கா அதைக் கண்டுகொள்ள வில்லை. அந்தச் செயற்பாட்டில் இறங்கிய பலர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தில் பெயரெடுத்தவர்கள் மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் ஆகியோரே. இதில் தற்போதுவரை களத்தில் நிற்பது மாவை சேனாதிராசா மட்டுமே.

1972இல் கடையடைப்பு, கர்த்தால் போன்றவற்றால் இலங்கைக் குடியரசு ஆவதை எவ்வாறு தடுக்க முடியாமல் போனதோ அதே நிலையே 50 வரு டங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் காணப்படுகிறது. கடையடைப்பு எதிர் ப்பு என்பது தலைவர்கள் மக்களுக்குள் இறங்காது தமது சொகுசு வீடுகளுக்குள் இருந்தவாறு அறிக்கை விடுவதன் மூலம் அலுவல் பார்க்கும் செயற்பாட கவே உள்ளது. அன்றாடம் உழைத்துச் சீவிப்பவர்கள் இந்த முடக்கலால் பாதிக்கப்படுகின்றனர். சாதாரண மக் களில் பலர் தமது பிள்ளைகளை ஆயு தப் போராட்டத்தில் இழந்து நிர்க்கதி யான நிலையில் வாழ்ந்து கொண்டி ருக்கின்றனர். கடையடைப்புப் போராட் டத்துக்கு அழைப்பு விடுத்த தலைவர் களின் பிள்ளைகள் யாருமே போராட வும் இல்லை போர் காரணமாக இறக் கவும் இல்லை. வறுமையில் வாடவும் இல்லை.

**தலைவர்கள் போராடலாம்**

தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கு பவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள் ளும், கடுமையான அறிக்கைகளை விட் டெறியும் மாவை, சுமந்திரன், சிறிதரன், சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன் னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்னேஸ் வரன் ஆகியோர் தமது கோரிக்கை களை முன்வைத்து வடக்கிலும் கிழக் கிலும் சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துக் குறைந்தது அதில் 5பேராவது மக்களுக் காக உயிர் துறந்தார்களானால் இந்தக் கடையடைப்பு இந்தியாவையும் பன் னாடுகளையும் திரும்பிப் பார்க்க வைக்கும் என்று கூறலாம். இவர்களின் சாவு பெரியதொரு தாக்கத்தை ஏற் படுத்தும். அதேவேளை ஈழத் தமிழ ருக்கு அரசியல் தீர்வு அவசியம் என்ப தையும் காத்திரமாக வெளிப்படுத்தும். ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இத்தகைய முயற்சி ஒன்றில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் களமி றங்கியிருந்தால் பின்னர் ஏற்பட்ட 30

திகதிய தேர்தலில் கூட்ட மைப்பின் சார்பில் பி.பியசேன வெற்றி பெற்றார். 2015 ஆக ஸ்ட் 17 தேர்தலில் க.கோடீஸ் வரன் வெற்றி பெற்றார். 2020 தேர்தலில் எவரும் வெற்றி பெறவில்லை. கூட்டமைப்பு 25ஆயிரத்து 257 வாக்குகளை மாத்திரம்பெற்றது. ஆனால், தேசியப் பட்டியல் ஆசனத் தைக் கலையரசனுக்கு வழங்கி அம்பாறையைக் காப்பாற்றியது கூட்டமைப்பு.

நிலமை இவ்வாறிருக்கும் போது அங்கு வர்த்தகர் சங் கம் கடையடைப்புச் செய் ததை வைத்து வடக்குக் கிழக் கில் நிர்வாக முடக்கம் வெற்றி பெற்றது என்று கூற முடியாது. அம்பாறை என்கிற ஒரு மாவட்டம் தமிழர் தாயக பூமியிலிருந்து பறிக்கப்பட்டி ருக்கிறது என்பதே உண்மை. அம்பாறைத் தமிழர்கள் சிலர் கடையடைப்பை மேற்கொண் டாலும் அங்குள்ள சிங்கள, முஸ்லிம் மக்களை எதிர்த்துச் செயற்பட முடியாத நிலையே காணப்படுகிறது. 30 வருட ஆயுதப் போராட்டத்தின் போது வடக்குக் கிழக்குத் தாயக நிலமானது அம்பாறை யிலிருந்து குறுகி வந்து முல் லைத்தீவின் முள்ளிவாய்க் காலுடன் படையினரின் கட் டுப்பாட்டுக்குள் சென்றது. இதனால் தாயக நிலத்தை மீட்கவேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கடசிகளும் தலமைக ளும் தமது தாயகக் கோட் பாட்டு வேலைத்திட்டங்களை அம்பாறையிலிருந்தே ஆரம் பிக்க வேண்டும். யாழ்ப்பாணத் தலைவர்கள் யாழ்ப்பாணத்தி லிருந்து அறிக்கை விடுவதன் மூலம் நிர்வாக முடக்கம் செய்வதன் பின்விளைவே அம்பாறை மாவட்ட மக்களின் நிர்க்கதி நிலையாக இருக்கி றது. நிர்வாக முடக்கத்தின் பின் எவ்வித மாற்றமும் இல்லாதும் காணப்படுகிறது.

வருட ஆயுதப் போராட்டத்தைக்கூடத் தடுத்திருக்க முடியும். அதைவிட அவ்வாறு இறக்கும் தலைவரை மக்கள் தமது நினைவில் என்றுமே வைத்திருப்பர். அவர்களுக்குச் சிலைகள் வைத்தும் நினைவுகூருவர்.

**சிங்களக் குடும்பங்களும் உணர வாய்ப்புண்டு**

முன்னனித் தமிழ்த் தேசியம் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன், சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் சிங்களக் குடும்பங்களுடன் திருமண, உறவுகள் என வைத்திருப்பதால் இத்தலைவர்கள் உணவு தவிர்ப்பிருந்து மரணிக்கும்போது அவர்களைச் சார்ந்த சிங்களக் குடும்பங்களும் தமிழ் மக்களுக்குத் தீர்வொன்றை முன்வைத்தாக வேண்டும் எனக் களமிறங்கவும் வாய்ப்புண்டு. இந்தத் தலைவர்களின் மரணத்தால் சிங்கள மக்களையே ஆட்டம்காண வைக்க வழியிருப்பதால் அதைச் செய்வதே சரியானது. ஒரு நாள் கடையடைப்பால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை.

தற்போதயை அரசதலைவர் ரணில் - மகிந்த கூட்டு அரசும் ஏனைய இனவாதிகளும் ஒருபோதும் இந்த நிர்வாக முடக்கப் போராட்டத்தைக் கண்டுகொள்ளப் போவதில்லை. மிகப் பிரமாண்டமாக நடந்த காலி முகத்திடல் போராட்டத்தைக்கூட பிற்காலத்தில் இல்லாமல் செய்திருக்கிறார்கள்.

வடக்குக் கிழக்கு முடக்கப்படுவதால் அரசுக்கோ சுற்றுலாப் பயணிகளுக்கோ அரச ஊழியர்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மாணவர்களின் கல்வி, விவசாயம், மீன்பிடி, சிறு தொழில்கள் என அடிமட்ட மக்களே இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்த் தலைவர்கள் இத்தகைய கடையடைப்பு, முடக்கம் போன்றவற்றைச் செய்து தமது சரிந்துபோன அரசியல் செல்வாக்கை மக்கள் மத்தியில் கட்டியெழுப்பவே முனைகிறார்கள். தவிர அவற்றால் மக்களுக்கு எவ்வித நன்மையோ, அரசுக்கு நஷ்டமோ ஏற்படப்போவதில்லை.

# பொன்னியின் செல்வன் 2



## ஆதித்த கரிகாலன் - நந்தினி காதல் கதை



கடல் சீற்றத்தில் சிக்கிய அருண்மொழி வர்மன் (ஜெயம் ரவி) உயிரிழந்துவிட்டார் என்று சோழர்களுக்குத் தகவல் கிடைக்கிறது. ஆனால், அருண்மொழி வர்மனை ஊமை ராணி (ஐஸ்வர்யா ராய்) காப்பாற்றி விடுகிறார். உயிர்பிழைத்தாலும் ஒருவித காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அவரை வந்தியத்தேவனும் (கார்த்தி) பூங்குழலியும் (ஐஸ்வர்யா லக்ஷ்மி) மீட்டு நாக பட்டினத்தில் உள்ள புத்த மடத்துக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கின்றனர். அருண்மொழி வர்மன் உயிரோடு இருப்பதைத் தெரிந்துகொண்ட பாண்டியர்கள் சுந்தரச் சோழரையும் (பிரகாஷ்ராஜ்), அவரது மகன்கள் இருவரையும் கொல்ல முடிவெடுத்து நந்தினியின் வழிகாட்டுதலில் சதித்திட்டம் தீட்ட, அந்தச் சோழர்கள் மூவரும் கொல்லப்பட்டனரா? பட்டத்து இளவரசனாக அருண்மொழி வர்மன் முடிசூடினாரா? என்பதுதான் மீதிக்கதை.

அரச அதிகாரத்தை அடைய நிகழும் சூழ்ச்சிகள், துரோகங்கள், சதி வலைகள் எல்லாவற்றையும் விட



ஆதித்த கரிகாலன் - நந்தினியின் காதல் கதையே தனித்துத் தெரிகிறது. அந்தக் காதல் காட்சிகளில் மணிரத் னத்தின் அழகியல் தனித்துத் தெரிகிறது. பிரமாண்ட கடம்பூர் மாளிகையின் ஒளிவிளக்குகள் சூழ்ந்த அந்த அறையில் வாளுடன் நிற்கும் நந்தினியிடம் தன் உயிரைத் துச்சமென எண்ணிக் கரிகாலன் பேசும் காட்சியும், ரவிவர்மன் கமராவின் மூலம் உள்ளடக்கியிருக்கும் ரம்மியமான சட்டகமும் பின்னணியில் 'சின்னஞ் சிறு நிலவே' பாடலின் இசையும் அற்புதம்.

முதல் பாகத்தில் இளவரசன் அருண்மொழி வர்மன் ரசிகர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். இந்தப் பாகத்தில் ஆதித்த கரிகாலன் - நந்தினியின் காதல் ஈர்க்கிறது. கல்கியின் நாவலில் இடம்பெற்றிருப்பதைப் போல ஆதித்த கரிகாலனைக் கொன்றது யார் என்பதை புதிர்போல பதிவு செய்திருக்கிறார் மணிரத்னம்.

படத்தின் தொடக்கமே இளவரசனுக்கும் (ஆதித்த கரிகாலன்) கைவிடப்பட்ட பெண்ணுக்கும் (நந்தினி) இடையேயான காதல் அதீத வசனமில்லாமல் பின்னணி இசையுடன் காட்சி மொழியில் விவரிக்கப்படும் விதமும், அந்தக் காதலின் பிரிவை காட்சிப் படுத்தியிருந்த விதம் ஈர்க்கின்றன. இந்த இரண்டு கதாபாத்திரங்களுக்கான காட்சிகள் மற்றைய கதாபாத்திரங்களை மறக்கச் செய்து விடுகின்றன.

படத்தின் முதல் பாதி அதீத உரையாடல்களுடன் நீள, விக்ரம் - ஐஸ்வர்யா ராய், கார்த்தி - த்ரிசாவுக்கான காதல் காட்சிகள், கார்த்தி - ஜெய்ராம் இடையிலான காட்சிகளைத் தாண்டி பெரிய அளவில் சுவாரஸ்யமில்லாமல் நகர்கிறது. அழுத்தமான காதலும், உணர்வுகளாலும் இரண்டாம் பாதிக்குப் பலம். நந்தினியின் பின்புலக்கதை, சோழர்களைச் சுற்றிப் பின்னப்படும் சூழ்ச்சிகள், ஊமை ராணியின் விவரிப்பு, வீரபாண்டியனுக்கும் (நாசர்) நந்தினிக்குமான உறவு உள்ளிட்டவை ஆர்வமூட்டுகின்றன.

**பாத்திரங்கள்**

முழுமையில்லாமல் அடுத்தடுத்து வரும் காட்சிகள், நினைவில் நிற்க போராடும் எக்கச்சக்க கதாபாத்திரங்கள் சிக்கலாக உள்ளன. நாவலில் கொல்லப்பட்ட கதாபாத்திரங்கள் படத்தில் உயிரோடு வருகின்றன.

ஆதித்த கரிகாலனாக ஆற்றாமை, கோபம், இழந்த காதலின் வலி, ஆக்ரோஷம் என விக்ரமும், பழிவாங்கும் வெறி, துரோகம், தவிப்பு என நந்தினியாக ஐஸ்வர்யா ராயும் நடிப்பில் தனித்து தெரிகின்றனர். மகிழ்வான கதாபாத்திரமாக இருந்தாலும், தன் இளவரசனை காக்க தவறிய குற்ற உணர்ச்சியில் கலங்கும் இடத்தில் வந்தியதேவனாக கவனம் பெறுகிறார் கார்த்தி.

பெரிய அளவில் இடம் இல்லாவிட்டாலும் வெளிப்படுத்தாத காதல், சோழ சாம்ராஜியத்தையும், சகோதரர்களையும் காக்க வேண்டிய பொறுப்பில் குந்தவையாகத் த்ரிஷா கவனம் பெறுகிறார். முந்தைய பாகத்தில் அருண்மொழி வர்மனாக ஈர்த்த ஜெயம்ரவி போர்க் காட்சிகளிலும், இறுதிக் காட்சியிலும் முத்திரைப் பதிக்கிறார். ஐஸ்வர்யா லக்ஷ்மியை தேடும் ரசிகர்கள் கண்களுக்கு இந்தப் பாகத்தில் ஏமாற்றம். மற்ற நடிகர்கள் தங்களுக்கான கதாபாத்திர தேவையை உணர்ந்து உழைப்பைக் கொட்டியுள்ளனர். ஆனாலும் 'பொன்னியின் செல்வன் 2' ஆதித்த கரிகாலனுக்கும் - நந்தினிக்குமானதாகவே மனதில் பதிந்து விடுகிறது.




தர்மராசா

# சிறைக்குள்...


## அதிர்ச்சி விளம்பரம்

அனுராதபுரச் சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்தபோது அங்கிருந்த சிவில் கைதி ஒருவர் புதிய செருப்புச் சோடி ஒன்றைப் பை ஒன்றுக்குள் போட்டு வந்து மதிலில் இருந்த சிறிய துவாரம் ஊடாக எங்களுக்குக் காட்டி அதை வைத்துக்கொண்டு 200ரூபா தருமாறு கேட்டார். அந்தச் செருப்பு முதல் நாள் சிறைக்குள் வந்த ஒருவருடையதாக இருக்க வேண்டும். அவரை ஏமாற்றி அல்லது கஞ்சா, கெரோய்ன் தேவைக்காக அதை விற்க அவர் முயற்சித்தார் போலும். எங்கள் பகுதிக் கைதிகள் யாரிடமும் அப்போது பணம் இருக்கவில்லை. இறுதியில் அந்தச் செருப்புகளை வைத்துக்கொண்டு 50 ரூபா தந்தால் போதும் என்று கேட்டான். அந்தச் செருப்புகளின் பெறுமதி கிட்டத்தட்ட 600 ரூபாவாக இருக்கும்.

இவ்வாறு பல கைதிகள் சிறையிலுள்ள வேறு வார்ட்களில் ஏதாவது பொருள்களைக் களவெடுத்துக்கொண்டு வந்து தமிழ் அரசியல் கைதிகளுக்கு விற்பார்கள். ஏன் எனில் தமிழ் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த பகுதிக்குள் வந்து சிறை அதிகாரிகள் சோதனை நடத்துவது குறைவு. அதைவிட வேறு கைதிகள் எங்களின் பகுதிக்குள் வர அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே குந்தகமான அல்லது சட்டவிரோத விடயங்கள் நிகழ வாய்ப்பில்லை என்பதால் தமிழ் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த பகுதிக்குள் சிறை அதிகாரிகள் பெரும்பாலும் சோதனைகள் செய்வதில்லை. இது களவெடுத்து வியாபாரம் செய்பவர்களுக்கு வாய்ப்பாக இருந்தது.

வெளி வாழ்க்கையில் எந்தளவு பணம் இருந்தபோதும் சிறைக்குள் சென்றதும் ஒரு ரூபா பணம் கூட இல்லாமல் பல கைதிகள் அங்கலாய்த்துத் திரிவதைக் காணாலாம். அந்தச் சூழலில் அவர்களது உணர்வுகளை மற்றவர்கள் புரிந்து கொள்வது சிரமமானது. பாடசாலைப் பருவத்தில் கையிலிருக்கும் பணம் முடிந்தபின் ஐஸ்கிரீம், இனிப்புப் பண்டங்களைப் பார்த்து அவற்றை வாங்கும் உணர்வால் துடிக்கும்போது யாராவது பணம் தரமாட்டடார்களா? எவ்வாறாயினும் எமக்குப் பணம் கிடைக்காதா? என்று ஏங்குவதை ஒத்திருக்கும் கைதிகளின் அங்கலாய்ப்பு.

சிறைக்குள் நிலவும் பொருளாதாரம் முடிய



கதிரேசன் காத்தவராயன்

# நாங்களும் செம்மறியாட்டுப் பட்டிதானாம்?

'கடவானைத் திறக்கிற நேரம் கடைசிக் கடப்புத்தடியை எடுக்க முன்னம் தலைச்சன் கிடாய் கடந்து பாயிறதும் கடைசித்தடி எடுத்தாப் பிறகும் பின்னாலை வாற ஆடுகளும் பாய்ஞ்சுதான் போகும் கண்டியளோ' எண்டுகொண்டு வல்லியம்மான் வந்தார். கோயிலடியிலை அண்டைக்கு நானும் முருகேசரும் கனகரும் கதைச்சுக் கொண்டிருக்கேக்கைதான் வல்லியம்மான் வந்தவர்.

'என்ன அம்மான் செம்மறிப் பட்டி திறந்துபோட்டு வாறியளோ?' எண்டன் நான். 'இஞ்சார் கதிரேசு நீ..நீ.. என்ரை வாயைக் கிண்டிற தெண்ட முடிவிலைதான் கேக்கிறாய்போலை?' எண்டு சிரிச்சார் வல்லியம்மான். 'ஏனம்மான்? கதிரேசண்ணை கேட்டது நியாயந்தானே?' எண்டார் கனகர். 'எடப்பா...நாட்டு நடப்புகள் தெரிஞ்ச மனிசரெண்டு நினைச்சல்லே சொன்னனான்... ஒண்டுந் தெரியாத ஆக்களாயல்லே இருக்கிறியள்.' எண்டு நக்கலாச் சிரிச்சார் வல்லியம்மான்.

'எல்லாருக்கும் எல்லாந் தெரிஞ்சிருக்கவேணுமெண்டு இருக்கோ?' எண்டு கொஞ்சம் கடுப்பானார் முருகேசர். 'எடப்பா முருகேசு...கோவம் வாறமாதிரிக் கிடக்கு... நான் இப்பஎன்ன உன்னையோ இதிலை இருக்கிறவையையோ சொல்லயில்லை...பொதுவாத்தான்... என்னையும் சேத்துத்தான் சொல்லுறன் ஏதாவது விளக்கத்தோடைதான் இருக்கிறமோ?' எண்டார் நிலைமையை தணிக்கிறமாதிரி வல்லியம்மான்.

'ஆனால் செம்மறியாடுகளோடை எங்களை ஒப்பிடுறதுதான் பிரச்சனையாக்கிடக்குது...'எண்டு கனகர் இழுத்தார். வல்லியம்மான் சிரிச்சார். 'கௌரவத்துக்கொண்டும் குறைச்சலில்லை... அண்டைக் கேன்கர்த்தால் செய்ததெண்டு தெரியுமோ? பூட்டெண்டாங்கள் பூட்டினமெண்டதை விட காரணம் சம்மந்தமாய் ஏதாலும் ஆருக்கும் தெரியுமோ?' எண்டு புறுபுறுத்தார் வல்லியம்மான். 'உண்மைதான் அம்மான்'எண்டு சறண்டரானார் கனகர். அந்த நேரமாப் பாத்து சுதனின்ரை சினேகிதப் பெடியள் ரண்டு பேர் -ஏற்கனவே அறிமுகமான

பொருளாதாரமா? திறந்த பொருளாதாரமா? என்பது விற்பவைனையும் வாங்குபவனையும் பொறுத்தது என்று முன்பு ஓரிடத்தில் குறிப்பிட்டேன். இந்தப் பொருளாதார வரைவிலக்கணத்தின்படி ஒரு பொருளுக்கான கேள்வி கூடினால் அதன் விலை கூடும். பொருள் உற்பத்தி அதிகரித்தால் விலை குறையும் என்ற வழமையான வெளியுலகின் நிலை சிறைக்குள் இல்லை. விற்பவனுக்குப் பணம் அவசரம் என்றால் விலை குறையும். வாங்குபவனுக்குப் பொருள் அவசரம் என்றால் விலை கூடும் என்ற புதிய நிலையே நிலவியது. இந்த ஏற்ற, இறக்கம் எந்தளவுக்கு இருக்கும் என்பது அந்தச் சூழலையும் நபர்களையும் தேவைகளையும் பொறுத்தமைந்தது. பாதுகாப்பு அதிகாரிகள் பிடித்துவிடுவார்கள் என்ற பயம், தரகர்களைப் பொறுத்தும்கூட இது தீர்மானிக்கப்படும்.

25 வருடச் சிறைத்தண்டனைத் தீர்ப்பைப் பெற்ற கைதி ஒருவர் போகம்பரைச் சிறையில் மிகப் பெரிய கெரோய்ன் வியாபாரியாக இருந்தார். அவர் ஒரு நாள் என்னுடன் கதைத்துக்கொண்டிருந்தபோது ஒரு விடயத்தைப் பகிர்ந்தார். போகம்பரையில் மட்டும் 6 லட்ச ரூபாவுக்கு கெரோய்ன் வியாபாரம் செய்தார் என்றும் பதுளைச் சிறையில் 3லட்ச ரூபா வரை கெரோய்ன் விறபனை செய்தார் என்றும் கூறினார். சிறைக்குள் அடைபட்டதும் குடும்பத்தினருக்கு மதாமாதம் பணம் அனுப்ப வேண்டிய தேவை இருந்தது என்றும் அதற்கு இந்த வியாபாரம் தான் வழியிட்டது என்றும் சொன்னார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தலைமயிர் வெட்டுவதுகூட ஒரு பெரிய வியாபாரமாக நடந்தது. கைதி ஒருவர் சிறை நிர்வாகத்துக்குத் தெரியாமல் சொந்தமாகக் கத்திரிக்கோல் வைத்திருந்தார். அதை அவரிடமிருந்து வாடகைக்குப் பெறுவதானால், வாடகையாக ஒரு சன்லைற் சவர்க்காரம் கொடுக்க வேண்டும். தலைமயிரை வெட்டி விடுபவருக்கு ஒரு சன்லைற் சவர்க்காரம் கொடுக்க வேண்டும். தலைமயிர் வெட்டி விடுவதற்குச் சன்லைற் அல்லது சிறிய பற்பசை கூலி பெறப்படும் என இன்னோர் கைதி விளம்பரம் எழுதிப் போட்டிருந்தார். பூசாவில் சிறைச்சாலை நிர்வாகத்தினரின் கத்திரிக்கோல்களை வாங்கி அவர்களின் கண்காணிப்பிலேயே கைதிகள் தலைமயிர் வெட்டுவதுண்டு. பூசாவிலிருந்து களுத்துறைக்கு வந்து இந்த விளம்பரத்தைப் பார்த்தபோது அதிர்ச்சியாக இருந்தது.

(தொடரும்)

பெடியள்தான்- வந்தவங்கள் எங்களைக் கண்டிட்டு கிட்டவாய் வந்தாங்கள்.

'என்ன தம்பியவை... எப்பிடிப் போகுது?.. இருங்கோவன்' எண்டார் முருகேசர். அவங்களும் இருந்துகொண்டு 'புதினங்களெண்டு என்னத்தைச் சொல்ல குழப்பங்கள்தான்..' எண்டு ஒருத்தன் சலிக்க 'என்ன செய்யிறதெண்டு ஒண்டுமாய் விளங்காத நிலையிலையல்லே போகுது நிலமையள்?' எண்டான். 'சரியாச் சொன்னீர் தம்பி நாங்கள்.. எங்கடை கதையும் உதிலைதான் நிக்குது...' எண்டு முருகேசர் கதையைச் சொல்ல விரக்தியாய்ச் சிரிச்சாங்கள்.

'உண்மைதான் அங்கிள்... செய்யிற வேலையிலை தெளிவெண்டது கிடையாது... அண்டாடம் சேதமாகிறமரக்கறி வியாபாரி சந்தையைப் பூட்டுறான்... கிடக்கிற ஸ்ரொக்கை பழையவிலையெண்டு விக்கிறவன் மத்தியானமே கன இடங்களிலை திறந்திட்டாங்கள்' எண்டுகொண்டிருக்க 'வடிவாச் சொன்னாயடா தம்பி...உதுக்கை ஒரு விசயமிருக்கு... கவனிச்சியளோ தெரியாது.. எல்லா இடமும் பூட்டுறாங்களெண்டு பூட்டினதே தவிர ஏன் என்னத்துக்கெண்டு தெரிஞ்சு பூட்டேல்லை...' எண்டார் முருகேசர்.

'ஏனப்பா சந்தை கூடயில்லை எண்டு அங்கனை நிண்ட ஆக்களைக் கேட்டன்... ஏதோ கர்த்தாலாம் எண்டாங்கள் சிலபேர்... புத்தருக்குக் கொயில் கட்டுறதுக்கெண்டாங்கள் சிலபேர்...' எண்டு சொல்லி நிப்பாட்டினார் வல்லியம்மான். 'பிள்ளையளை நாளைக்கு பள்ளிக்கூடமில்லையாம்... பாத்து வாங்கோ எண்டு சொல்லிப்போட்டு வாத்திமார் போயிருந்திருக்கிறாங்கள்... ஆரைப் பாத்து ஆர் போறது...பிள்ளையளுக்கு ஒரு நாள் லீவெண்ட சந்தோசத்தோடை சரி... என்ன ஏதெண்டு தெரியாது...சொல்லிக் குடுத்திருக்கலாமல்லே?' எண்டார் பெடியளைப் பாத்து முருகேசர்.

'எங்கடையாக்களுக்கே குழப்பம்...சங்கங்கள் சொல்லுமெண்டு பாத்தால் அவையின்ரை சத்தமே இல்லை... ஆனால்ரியூசனுகள் சில இடங்களிலை நடந்திருக்காம்' எண்டு ஒருவிதமான சங்கடத்தோடை சொன்னான் ஒராள். 'எதையும் உணர்வு பூர்வமாய் செய்யிற செய்விக்கிற பக்குவம் இல்லை... எல்லக் கட்சியளும் சேந்தெண்டதிலையே தேசியம் எங்களிட்டைத்தான் எண்டிறவை குழப்பம்... சேந்தகட்சியள் ஒவ்வொரு இடத்திலை ஒவ்வொரு கட்சியாய் றோட்டுக்கு இறங்கி...' எண்டு நான் சொல்ல 'ரவுணுக்கை இறங்கினவையல்லே...அது சும்மா படத்துக்காயிருக்குமாக்கும்' எண்டார் வல்லியம்மான்.

'போற போக்கிலை ஓடுறதுதான் ஒரே வழியாப் போச்சுது...எங்கைபோய் நிக்கப்போகிறமோ?'எண்டுகொண்டு எழும்பி வந்திட்டன்.



# 08

# மீட்டல்...

துன்பானந்த சுவாமி

பில்ற்றர் தண்ணீர் வியாபாரம் வேகமாக வளர்ந்துவரும் துறையாகிவிட்டது. கொண்டாட்டங்களில் போத்தல்த் தண்ணீர் அதி அத்தியாவசியப் பண்டமாக்கப்பட்டுவிட்டது. போத்தலுக்குள் இருக்கும் நீரினது மூலம் எது? போத்தலில் நீரடைக்கும் செயலொழுங்கென்ன? எப்போதாவது அறியமுற்பட்டிருக்கிறோமா? செம்பிலிருக்கும் நீரை எட்டிப் பார்த்து மணந்து பார்க்கிறோம். போத்தல் தண்ணீரை அப்படியே வாயை வைத்து உறுஞ்சிக் குடிக்கிறோம். காரணம் போத்தல் நீர் பற்றிய அதீதமா நம்பிக்கையே. எதை நம்புகிறோம்?

பல இடங்களில் எமது வழக்கமான கண்காணிப்புக் குறைபாடுகளுடன்தான் நீர் போத்தலில் அடைக்கப்படுகிறது. அருவிநீர், ஓடைநீர், ஆற்றுநீர் என்கிறவிதமான இடங்களிலிருந்தே குறித்த தொழிற்சாலைகளுக்கு நீர் பெறப்படுகிறது. அந்த நீர்மூலங்களினது தரம் பற்றிய ஆய்வுகளேதும் யதார்த்தமாகச் செய்யப்பட்டுத்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது குறித்த தொழிற்சாலையினது இயந்தி சாதனங்கள் மற்றும் செயல்முறைகள் பற்றிய சரியான கவனிப்புகள் உண்டா? தெரியாது.

தற்போது சாதாரணமாக ஒரு அறையினுள் வைத்து மூடிக்கு சீல்வைக்க முடியுமென்கிற நிலையைத் தொழில் நுட்பம் தந்திருக்கிறது. அதைவைத்து போத்தல் தண்ணீர் உற்பத்தியானது போத்தல் வாயை சீல் செய்வதனூடாக பெறுமதியாக்கப்படுகிறது. ஒரு லீற்றர் வடிகட்டிய தண்ணீர் நான்கு ரூபா. அதே ஒரு லீற்றர் போத்தல் தண்ணீர் எண்பது முதல் நூறு ரூபா வரை இருக்கிறது. போத்தலில் அடைப்பது வடிகட்டிய நீராக இருந்தாலும் கூட ஒரு இலாபகரமான தொழிலாகிவிட்டது. அதனால் பல விருந்து மண்டபங்கள் பக்க வருவாயை ஈட்ட இதனையும் செய்வதாக அறியமுடிகிறது.

இங்கேதான் எமது வினோதமான மனோநிலையொன்றைப் பற்றியும் பேசவேண்டியுள்ளது. சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று சிற்றுண்டிகளை உண்கிறோம். அதனது தயாரிப்புத் தொடர்பாக நிறையவே ஐயங்களை எழுப்ப முடியும். இப்போது பேசமுற்பது அவை பற்றியல்ல. உண்ணப் போயிருக்கிற எம்மைப் பற்றியது. சுற்றுண்டிகளை தட்டில் வைக்கிறார்கள். அமுக்கி அமுத்திப் பார்க்கிறோம். இதே வேலையை இதற்கு முன் பலர் செய்திருக்கலாம் என்பதை உணரத்தவறுகிறோம். எத்தனை கைத் தொடு கையை அப்பதார்த்தம் பெற்றிருக்கும்? என்று யோசிப்பதே கிடை யாது.

## அவசரமான உலகம் என்பதற்கூடாக நாம் நிறையவே விபரீதங்களுக்குள் சென்றுகொண்டிருக்கிறோம். விபரீதம் என்பதை அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலுமாக பின்தொடரிகளாக மட்டுமே நாம் இருக்கப் பழகியிருக்கிறோம்

அதைவிடச் சிரிப்பானது எம்முடனேயே கண் முன்பாகவே இருக்கிற எமது கையை நம்பாது கடையில் மேசையில் வெட்டி வைத்திருக்கும் கடதாசியைக் கொண்டு உணவுப் பண்டத்தை எடுத்து உண்கிறோம். அந்தக் கடதாசியினது பயணவழி பற்றி எண்ணுவதில்லை. குறித்த கடதாசி எங்கேயிருந்தது? எப்படி வந்தது? யார் வெட்டியது? எதனால் எப்படி வெட்டியது? என்கிறவிதமாக ஏதாவது எண்ணியதுண்டா? கடதாசியை முற்றுமுழுதாக நம்புகிறோம்.

இவ்விடயத்தைப் பேசுவதற்கான காரணம் கிணற்று நீரை நம்பாது போத்தல் நீரை நம்புவது என்பதுடன் பொருந்துகிற ஒன்று என்பதற்காகவே. கிணற்று நீரைக் கொதிக்கவைத்து வடித்துப் பருகுவதே சிறந்தது என்பதற்காகவே. கையைக் கழுவுவதிலுள்ள சோம்பல் போலவே நீரைக் கொதிக்க வைப்பதற்கும் சோம்பல்படுகிறோம் என்பதே உண்மையானது. இங்கும் அறிவாளிகள்(?) தலையீடு உண்டு.



கொதிக்க வைக்கும்போது நீரிலுள்ள பல கனிமங்கள் கெட்டு விடுகின்றன. உடலுக்கு உதவுகிற உயிரங்கிகள் இறந்துவிடுகின்றன. என்றெல்லாம் கதையளக்கிறார்கள். அவர்களது கூற்று உண்மையாக இருக்குமானால் நவீன வடிப்பான்களால் சுத்திகரிக்கப்படுகிற நீரில் எதுதான் எவைதான் மீந்திருக்க வாய்ப்புகளுண்டு? என்றேதாவது எண்ணித்தான் சொன்னார்களா? சொல்கிறார்களா? அவர்களது கூற்றை நாம் ஆராய்ந்துள் ளோமா? எதுவுமில்லை.


எண்ணெய் விடயம் போலவேதான் இதுவும் சிபாரிசுகள் விளம்பரங்களால் வழிநடாத்தப்படுகிறோம் என்பதே உண்மையானது. தண்ணீர் என்பது அதிகம் மாசடைந்துவருகிற ஒரு இயற்கை வளம் என்பதை நாம் எப்போதும் கவனத்திலெடுப்பது அவசியமானது. அதற்காக அறியாமை புரியாமையினால் உடலாரோக்கியம் மற்றும் பொருளாதாரப் பாதிப்புகளுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறோம்.

அவசரமான உலகம் என்பதற்கூடாக நாம் நிறையவே விபரீதங்களுக்குள் சென்றுகொண்டிருக்கிறோம். விபரீதம் என்பதை அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலுமாக பின்தொடரிகளாக மட்டுமே நாம் இருக்கப் பழகியிருக்கிறோம். உணவு மற்றும் குடிபானம் என்று வருகிறபோது குடிநீருக்காகப் படுகிறபாடு இப்படி இருக்க நிறம் சுவை மணம் என அனைத்தும் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட பானங்களது நிலையைப்பற்றிப் பேச ஏராளமுண்டு. பேசுவோம்.

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)




06

அவ்வாறு தன் பாரம்பரியத்தைக் கூறிக்கொள்ளும் அவர் உண்மையிலேயே தேசிய போராட்ட வீரர் ஒருவரின் பாரம்பரியத்தையுடைய பவித்திரமான ஆரிய சிங்கள பௌத்தரா? வளவின் - ஹாமுவா?

தலைசிறந்த சிங்கள வீரனாக அனைவராலும் புகழப்படும் துட்டகைமுனுவின் சரிதையிலிருந்து ஜூனியஸ் ரிச்சர்ட் சரிதை முழுமையாக வேறுபட்டதாகும். எனினும் பாருங்கள் அற்புதத்தை! யானையில் ஏறி முன்னோக்கி வரும் ஜூனியஸ் தமிழர்களை இரு கால்களிலும் பிடித்துச் சுழற்றிக் கடலிலே வீசத் தயாராகும் போலித் துட்டகைமுனுவின் வேடத்துக்கு ஆரூடமாகி உள்ளார்.

என்ன நோக்கத்துக்காக, பல நூற்றாண்டுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றினால் தீர்மானிக்கப்பட்ட தேச எல்லைக்குள் வாழும், ஒரு பண்டைய பரம்பரையின் பண்பாட்டினையும் மொழியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் என்ன தவறு செய்ததற்காக? துட்டகைமுனுவின் பின்னர் சிங்களப் பரம்பரையின் இவ் இறுதிக் காலப் பகுதியில் போலித் துட்டகைமுனுக்கள் அவ்வப்போது தோன்றிச் சிங்களப் பொற்காசின் பெறுமதியைக் குறைப்பதற்காகவா?

சற்றே நின்று இதுகுறித்துச் சிந்திக்குமாறு ஜூனியஸ் ரிச்சாட்ர் ஜெயவர்த்தனாவை நான் அழைக்கிறேன். அவ்வாறு சிந்திப்பதற்கு அவர் சற்றே தாமதித்தாரானால் தமிழ் மக்களைக் கடலில் தள்ளுவதற்கு முன்பு, முதலில் கடலில் தள்ளவேண்டியது எந்தவிதமான முக்கியத்துவமுமற்ற தன்னுடைய பாழாய்ப்போன காயமே என்ற சிந்தனை அவருக்கு உதிக்கும் என்பது நிச்சயமே.

துரதிர்ஷ்டவசமாக ஜூனியஸ் ரிச்சர்ட் தெரிவு செய்துள்ள 2500ஆண்டுகள் பழமையான வம்சத்தில் பலருக்கு 2300 ஆண்டுகள் பவித்திரமான தமிழ் இரத்தக் கலப்பு இருக்கிறது. அதன் பின்னர் தமது தந்தையியன் பக்கமாகத் தமிழ் இரத்த உரிமையை மாத்திரம் கொண்டிருந்த பரம்பரையில் சிலர் உயர்குடிப் பிறந்தோராய்க் கருதப்படுகின்ற போதும் ஒருவர் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அந்த அபகீர்த்திக்குட்பட்ட மூதாதை வேறு எவரு




# அப்பத்தை...!

இந்தப் புதுவித உணவைத் தமிழ்ப்படுத்தினால் அப்பத்தை என்றமைகிறது. மாவுடன் முட்டை கலந்து ஆக்கப்படுவதால் நாம் முட்டை ரொட்டி என்று பயன்படுத்துகிறோம். முட்டைத் தோசை தெரியும்...! முட்டை மாவு தெரியும்...! அதென்ன முட்டை ரொட்டி....? வித்தியாசமாக இருக்கிறதே...! உங்கள் புருவங்கள் வியப்பில் உயர்வது தெரிகிறது. முட்டையும் மாவும் பாலும் சேர்க்கப்பட்டுச் செய்யப்படுவதால் இதை முட்டை ரொட்டி என்கின்றனர். புதிய கண்டு பிடிப்பாக இருக்கிற இந்தப் புதிய ரொட்டி சுவை யிலும் புதுமையானதாகத்தான் இருக்கிறது. ஆகவே இந்த வாரம் இந்த முட்டை ரொட்டியை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

முட்டைகள் - 2
மாவு - ஒரு கப்
பசுப் பால் - 1 கப்
சீனி - 50 கிராம்
பேக்கிங் பவுடர், உப்பு - சிறிதளவு

முதலில் முட்டைகளைப் பாத்திரம் ஒன்றுக் குள் உடைத்து நன்கு அடித்துக்கொள்ளுங்கள். அடித்ததும் அதனுடன் சீனியைக் கலந்து நன்கு கரையும் வரை அடியுங்கள். அதனுடன் பசுப் பாலைக் கலந்து கொள்ளுங்கள். பின்னர் மாவைக் கலந்து நன்கு அடித்துக்கொள்ளுங்கள். இறுதி யாக பேக்கிங் பவுடர் மற்றும் உப்பு ஆகியவற் றைச் சேர்த்து நன்கு கலக்குங்கள். சிறிது நேரம் (குறைந்தது 15 நிமிடங்கள்வரை) மூடி வையுங் கள். பின்னர் தோசைக் கல்லில் அல்லது நொன் ஸ்ரிக் எனப்படும் பாத்திரத்தில் கரண்டியால் அள வாக ஊற்றித் தோசைகளைப்போல இரண்டு பக் கங்களும் மாற்றி மாற்றித் திருப்பிப் போட்டுச் சூடாக்கி எடுத்துக்கொள்ளுங்கள். சுவையான முட்டை ரொட்டி தயார்.



மல்லர். சிலாபம் மஹாமுதலி பதவி வகித்த சட்டத்தரணி சேதவத்தை ஜேம்ஸ் அல்பிரட் ஜயவர்த்தனவின் முப்பாட் டன் அல்லது தம்பி முதலி ஆவார். சேதவத்தை வழக்கறி ஞரின் ஏகபுத்திரன் எயுஜீன் வில்பிரட் ஜெயவர்த்தன. அவர் மெய்யான கிறிஸ்தவ விசுவாசியாவார். நீண்ட காலமாகப் பலராலும் அவ்வப்போது பேசப்பட்டு வந்த தம்பி முதலி யின் சரிதை இப்போது நூலுருப் பெற்றுள்ளது. டி.ஜய வர்த்தன, ஜி.டி.ஸ்டோப்ஸ் ஆகிய இருவரும் இந்நூலினை ஆக்கியுள்ளார்கள். இவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருந்தும்கூட வேண்டுமென்றே சில தகவல்களை நூலில் சேர்க்காமல் விட்டுள்ளார்கள். இக்கட்டுரை மூலம் அந்தக் குறைபாட்டை நீக்க நான் முயல்கிறேன்.

1830 மே மாதம் 15ஆம் திகதி வெளிவந்த "சிலோன் கெஸட்" பத்திரிகையின் அனுபந்தமாகவே தம்பி முதலி யின் சரிதம் முதன் முதலாக அச்சிடப்பட்டது. "தேசிய கிராமத் தலைவரின் சரிதை" என்ற பெயரில் வெளிவந்த அச்சுருக்கமான ஆக்கம் பிரித்தானியருக்குத் தம்பி முதலி ஆற்றிய சேவைகளைப் பெருமையாகக் கருதிய ஒருவரால் எழுதப்பட்டிருந்தது. ஏனைய இலங்கையர்களுக்கெனில் அது வெட்கம் கெட்ட துரோகமாகும். பிரித்தானியரின் ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்காகச் சந்தர்ப்பவாதிகளும் அடிவருடிகளும் ஒருவர் இன்னொருவரைவிடத் தம் திற மைகளைக் காட்டி இடம்பிடித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்திலே உண்மையான தேசாபிமானம் வரலாற்றிலிருந்து மறைந்து போனது. வெளிப்படையாகத் தோன்றாத துக்கன் னாராலைகள் (பிறர் துன்பத்தைத் தான் ஏற்றுக்கொள்பவர்) ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணிந்து பணிபுரிந்து தமது மடியை நிரப்பிக் கொண்டனர். அத்தகைய அபகீர்த்தி பெற்ற அடிவருடிகளில் முதன்மை இடம்பெற்றவர் தம்பிமுதலி.

"சிலோன் கெஸட்" பத்திரிகையில் தம்பி முதலியின் சரிதை வெளிவந்தபோது உயிர்வாழ்ந்த எவருக்கும் அவரு டைய தந்தை ஒரு தமிழர் என்பது தெரிந்திருந்தது. அத் தமிழ் இனத்தவர் ஹங்வெல்லைப் பிரதேசத்தில் ஒரு சிங்க ளப் பெண்ணைத் திருமணம் முடித்திருந்தார்;. அப்பெண் ணின் குடும்பப் பெயரையே தனது குடும்பப் பெயராகப் பயன்படுத்தினார் என்பதும் இரகசியம் அன்று. ஜெயவர்தன என்பதே அந்தப் பெண்ணின் குடும்பப் பெயர் ஆகும். காலத்துக்கு ஏற்றவாறு இவ்வாறு மாறிக்கொண்டபின் அனைத் தும் மாறின. முற்றிலும் புதிய மனிதராக மாறிய அத்தமிழ் இனத்தவர் தன்னுடைய குடும்பப் பெயரை மாத்திரமல்ல இனம், மதம் மற்றும் ஆடையணிகளையும் மாற்றிக்கொண் டார்.

தம்பி முதலியின் முன்னோர்கள் டச்சு ஆட்சிக் காலத் துக்கு முன்னரேயே இந்தியாவின் கோரமண்டலக் கடற் கரைப் பிரதேசத்திலிருந்து கொழும்பு வந்தடைந்தவர்கள் என மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் எந்தப் பொய்யினாலும் அந்தக் கடந்த காலத்தை மறைத்து விட முடியாது. பத்திரிகையில் அச்சரிதையை எழுதிய எழுத் தாளரும், டி.ஒய்லியும் குறிப்பிட்டுள்ளபடி தம்பி முதலி கோரமண்டல கடற்கரைப் பிரதேச செட்டிமார் குடும் பத்தி லிருந்து வந்தவராவார். எனினும் அதை ஒரு முடிந்த முடி வாக ஏற்றுக்கொள்ளாத கருத்துக்கள் நிறைய உண்டு. அவர் பொற்கொல்லர் குலத்தைச் சேர்ந்தவர் என வாதிடுவோரும் உள்ளனர். எவ்வாறெனினும் தர்மிஷ்டர்களையும் அயோக் கியர்களையும் கொண்ட பிரதான தமிழ்க் குலம் ஒன்றுக்கு அவர் உரித்தானவர் என்பது நிச்சயமே.

(மிகுதி அடுத்த வாரம்)

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?

## பூப்படைந்த பெண்ணைச் சருகுகள் மீதிருத்தித் தண்ணீர் வார்ப்பது...?

50



பூப்படைந்த பெண் பிள்ளைக்கு அன்றைய தினம் உறவுக்காரர் இணைந்து தலையில் தண்ணீர் வார்க்கும் சடங்கு ஒன்றைச் செய்வது நம்மவர் வழக்கம். அந்தப் பெண்ணைக் குப்பைகள் அல்லது சருகுகள் மீது அமர வைத்தே தலைக்குத் தண்ணீர் வார்ப்பார்கள். ஆனால் அவ்வாறு ஏன் செய்யப்படுகிறது என்று அவ்வாறு தண்ணீர் வார்ப்பவர்களைக் கேட்டால் அது பற்றிய விளக்கம் அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை.

முன்னைய காலத்தில் பூப்பெய்திய பெண்ணுக்குத் தலைக்குத் தண்ணீர் வார்க்கும்போது மறைப்பான அறைகள் அல்லது மறைப்பான கட்டட வசதிகள் குளியலறைகள் என எதுவும் இருக்கவில்லை. கிணற்றடியில் வைத்துத் தலைக்குத் தண்ணீர் வார்ப்பதே வழக்கமாக இருந்தது. அவ்வாறு தண்ணீர் வார்க்கும்போது பலர்கூடி அதை விநோதமாகப் பார்க்கும் வழக்கம் இருந்தது. தண்ணீர் வார்க்கும் போது பூப்படைந்த பெண்ணின் உடலில் இருந்து வெளியேறும் குருதி தண்ணீருடன் கலந்து வெளியேறும். அந்தக் குருதி யாருக்கும் தெரிந்து விடாதபடி மறைப்பதற்காகவே குப்பைகள் அல்லது சருகுகளைப் போட்டு அதன் மேல் பெண் பிள்ளையை அமர வைத்துத் தண்ணீர் ஊற்றினர்.

தற்போதைய சூழலில் தனியான குளியலறைகள் இருப்பதால் குப்பை மீது அமர வைக்கவேண்டிய அவசியம் இல்லை. முன்னோர்கள் ஏன் குப்பை மீது உட்கார வைத்து நீராட்டினார்கள் என்ற காரணம் தெரியாமலேயே பலர் இன்றும் இதை ஒரு சடங்காகச் செய்து வருகின்றனர். இது பூப்படைந்த பெண்ணுக்கு அசௌகரியமாக இருக்கும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.04.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781